# பழந்தமிழர்கள் மரபில் இசைக்கலை

**கோ.சவிதா**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஊற்றங்கரை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**முன்னுரை**

சங்க காலம் தமிழர்களின் பொற்காலமாகப் போற்றப்படுகிறது. அக்காலத்தில் தோன்றிய செவ்விலக்கியங்கள் தமிழர்களின் பண்பாட்டையும், வாழ்வியல் நெறிமுறைகளையும், போர்த்திறங்களையும் இசைக் கலைஞர்களையும் கூத்துக் கலைஞர்களையும் எடுத்துக்காட்டும் கருவூலங்களாக விளங்குகின்றன. 'ஈதல் இசைபட வாழ்தல்' என்னும் சொற்றொடர் ஒன்றே தமிழர் வாழ்வில் இசையின் தொன்மையைப் பறைசாற்றுகின்றது. இங்கு இசை என்பது மகிழ்ச்சி தரக்குடிய மங்களகரமான செயலாக வாழ்வியலோடு பொருந்திய பெருமையைக் குறிக்கிறது. தமிழ் என்னும் சொல்லுக்கு இசை என்னும் பொருளும் உண்டு என்பதால்தான் 'தமிழின் நீர்மை பேசி' என்று சம்பந்தரும் 'பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்' என்று சேக்கிழாரும் கூறியிருப்பதைக் காணமுடிகிறது. இவ்வகையில் பழந்தமிழர்களின் இசைக்கலையைப் பற்றி கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இசைக்கலையின் தொன்மை**

அகத்திணையியலில் உள்ள முப்பொருள்களில் மனிதனின் வாழ்வோடு ஒன்றோடுஒன்று தொடர்புடைய கருப்பொருள் பற்றி தொல்காப்பியர்

> **"தெய்வம் உணவே மாமரம் புள்பறை**
> **செய்தி யாழின் பகுதியோடு தொகை,**
> **அவ்வகை பிறவும் கருவென மொழிப"**

என்பார். பறை, யாழ் என்னும் இருவகை இசைக் கருவிகளை கருப்பொருளில் சுட்டியுள்ளார். இதில் பறை என்னும் அதிர்வுக்கருவி தோல்கொண்டு செய்யப்பட்ட தொன்மையான கருவி. இது தொழிலோடு தொடர்புடையது. ஐந்நிலத்திற்கும் உரியதை,

**குறிஞ்சி – வெறியாட்டுப்பறை**
**முல்லை – ஏறுகோட்பறை**
**மருதம் – நெல்லரிப்பறை**
**நெய்தல் – நாவாய் பறை**
**பாலை – ஆறலைப் பறை**

என்பதை அறியமுடிகிறது.

**பண்**

"எடுத்தன் முதலாம் இருநான்கும் பன்னிப்படுத்தமையால் பண்" (சிலம்பு: 3:26) என்பர் அடியார்க்குநல்லார். சங்ககாலத்திற்கு முற்படவே நானிலத்திற்கும் உரிய பண்களையும் இப்பண்களை இசைக்கும் யாழையும் தமிழர் அறிந்திருந்தனர். நரம்புகளின் வழியாக மென்மையான இசையை தரும் பழம்பெரும் இசைக்கருவியான 'யாழ்;' கேட்போரை மயங்கச் செய்து

பொழுதுபோக்கிற்கு உதவும் கருவியாக அமைகின்றது. இவ்யாழால் மீட்டக்கூடிய பண்வகைகளும் ஐவகை நிலத்தோடு தொடர்புடைய பண் அமைப்பைப் பெற்றுள்ளதை,

| | | |
|---|---|---|
| **குறிஞ்சிப்பண்** | - | **(குறிஞ்சி)** |
| **சாதாரிப்பண்** | - | **(முல்லை)** |
| **மருதப்பண்** | - | **(மருதம்)** |
| **செவ்வழிப்பண்** | - | **(நெய்தல்)** |
| **பாலைப்பண்** | - | **(பாலை)** |

தொல்காப்பிய கருப்பொருள் வழியாக அறியமுடிகிறது.

**இசைத்தமிழ் நூல்**

அழகுக் கலைகளில் நான்காவது கலை இசைக்கலையாகும். இதனை இசைத்தமிழ் என்றும் கூறுவர். இது காதினால் கேட்டு இன்புறத்தக்க இன்கலையாகும். தமிழர் வளர்த்த இயல், இசை, நாடகக் கலைகளில் இசைக்கலையோடு பழங்காலம் முதற்கொண்டே நூல்கள் பல இருந்துள்ளன. சிலப்பதிகாரத்தின் உரையாசிரியரான அடியார்க்குநல்லார் உரைப்பாயிரத்தில் பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம் முதலிய நூல்களும் இறந்தொழிந்தன எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் சிகண்டியார் இயற்றிய இசைநுணுக்கம், யாமளேந்திரர் செய்த பரதசேன்திபதியம், பாண்டியன் மதிவாணனார் செய்த நாடகத்தமிழ்நூல் என்னும் இவை ஐந்து நூல்களும் தம் காலத்தில் வழக்கிருந்தன எனவும் இவை ஐந்தும் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள இசை, நாடகநுட்பங்களை ஓரளவுக்குத் துணைக்கொண்டு தமது உரை அமைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

**பண் தோன்றும் விதம்**

சங்ககால இசை நூல்களையும் இசையிலக்கண நூல்களையும் குறித்து இதற்குறிய முதன்மை மூலங்களாகத் திகழ்கின்றன. இந்நிலையில் சுவடியினின்றும் கண்டெடுத்து அச்சியற்றப்பட்ட பஞ்சமரபு என்னும் இசைத்தமிழ் நூல் இசை மரபு, வாச்சிய மரபு, நிருத்த மரபு, அபிநய மரபு, தாள மரபு ஆகிய ஐந்து மரபுகளைக் கூறுகின்றன.

**“பண்ணோர் பதினேழாம் பண்ணியல் பத்தேழாம்**
**எண்ணுந் திறமிரண்டும் பத்தென்ப - நண்ணிய**
**பாலாய பண்ணூற்று மூன்று”**

என நூற்றுமூன்று பண்கள் தோன்றுமாற்றை அறிவனார் கூறுவார். (தொல்காப்பியம் இளம்பூரணம் உரியியல்)

**எட்டுத்தொகையில் குறிப்பிடப்படும் பண்கள்**

| | | |
|---|---|---|
| **நற்றிணை** | - | **படுமலைப்பண்** |
| **குறுந்தொகை** | - | **படுமலைப்பண், விளரிப்பண்** |
| **ஐங்குறுநூறு** | - | **முல்லைப்பண்** |
| **புதிற்றுப்பத்து** | - | **பாலைப்பண்** |
| **பரிபாடல்** | - | **பாலையாழ், நோதிரம், காந்தாரம்** |
| **அகநானூறு** | - | **குறிஞ்சிப்பண், செவ்வழிப்பண்** |
| **புறநானூறு** | - | **குறிஞ்சிப்பண், செவ்வழிப்பண், படுமலைப்பண், மருதப்பண், விளரிப்பாலை,** |

காஞ்சிப்பண் போன்ற பண்கள் இசைக்கப்படுகின்றன.

**பத்துப்பாட்டில் குறிப்பிடும் பண்வகைகள்**

| | | |
|---|---|---|
| **பொருநராற்றுப்படை** | - | **பாலைப்பண், குறிஞ்சிப்பண், மருதப்பண்** |
| **சிறுபாணாற்றுப்படை** | - | **நைவளப்பண், செம்பாலைப்பண், சீகாரம்** |
| **பெரும்பாணாற்றுப்படை** | - | **குறிஞ்சிப்பண், பாலைப்பண்** |
| **மதுரைக்காஞ்சி** | - | **அரும்பாலைப்பண்** |
| **குறிஞ்சிப்பாட்டு** | - | **நைவளம்** |
| **மலைப்படுகடாம்** | - | **குறிஞ்சிப்பண்** |

**பரிபாடல் பண்ணும் பாவலரும்**

பரிபாடலின் பதினொரு பாடல்களுக்குப் பண் பாலையாழ் என்றும் ஐந்து பாடல்களுக்குப் பண் காந்தாரம் என்றும் பழைய குறிப்புகள் கூறுகின்றன.

**"கீரந்தையார் பாட்டு**
**நன்னாகனார் இசை**
**பண்ணும் பாலை யாழ்**
**இளம் பெரவழுதியார் பாட்டு**
**மருத்துவன் நல்லச்சுதனார் இசை**
**பண் நேர் திறம்"**

முதலான குறிப்புகள் இசைப்பாட்டைப் பாடியவர் பெயரையும் பாட்டுக்கு இசைவகுத்தவர் பெயரையும், பண்ணின் பெயரையும் குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகிறது. அப்பரிபாடலிலேயே இயற்கை வழங்கும் கலை விருந்தோடு போட்டியிடும்வகையில் கலை வல்லுநர் அரங்கு அமைத்த வருணனையும் இடம்பெறுகிறது.

**"ஒருதிறம், பாணர் யாழின் தீங்குரல் எழ**
**ஒருதிறம், யாணர் வண்டின் இமிர் இசை எழ**
**ஒருதிறம், பண்ணார் தும்பி பரந்திசை ஊத**
**ஒருதிறம், மண்ணார் முழவின் இசை எழ**
**ஒருதிறம், பாடல் நல் விறலியர் ஒல்குபு நுடங்க**
**ஒருதிறம், வாடை உளர்வயின் பூங்கொடி நுடங்க**
**ஒருதிறம் பாடினி முரலும் பாலையங் குரலின்**
**நீடுகிளர் கிழமை நிறை குறை தோன்ற**
**ஒருதிறம், ஆடுசீர் மஞ்ஞை அரிகுரல் தோன்ற"**

என்று இசையோடு தொடர்புடைய யாழ், குழல் முழவு போன்ற இசைக்கருவிகளும் பாணர், பாடினி, விறலி என்று இசையைப் பயிற்றுவிக்கக்கூடிய வாய்ப்பாட்டு வல்லுநர்களும் 'ஆடசீர் மஞ்ஞை' என்று சிறப்பிக்கப்படும் நாட்டிய மங்கையர்களும் ஒருங்கே அமையப்பெற்ற கலையரங்க அமைப்பைப் பரிபாடல் வழி அறியமுடிகிறது.

**பாணர்கள்**

பண் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்து முதல் நீண்டது தான் பாண் என்பதாகும். இதனுடன் அர் விகுதி எனும் பலர்பால் ஈரு சேர்ந்தே பாணர் என்றாயிற்று. பண் இசைப்போர் பாணர் எனக் காரணப்பெயரைப் பெற்றனர். இவர்கள் இசையைத் தொழிலாகப் பெற்றவர்கள். அவர்களில் இசைபாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர், எனப் பல பிரிவினர் இருந்தனர். வாய்ப்பாட்டு இசைப்போர் இசைப்பாணர் என்றும், யாழ் இசைப்போர் யாழ்ப்பாணர் என்றும் தோல்கருவி இசைப்போர் மண்டைப்பாணர் எனவும் அழைக்கப்பட்டனர். இப்பாணர்கள் குடியிருந்த பகுதியைப் பாண்சேரி என்றுக் கூறுவர் அதனை,

**"குருகு நரல மனை மரத்தான்**
**மீன் சீவும் பாண் சேரியோடு"**

என்று மதுரைக்காஞ்சி பாடல் பாண்சேரி பற்றிக் கூறியுள்ளது.

**பண்டைய இசைக்கருவிகள்**

இசை ஏழு வகைப்படும் அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாகும். இசைப்பிறக்கும் உறுப்புகள் மிடற்றினால் குரலும், நாவினால் துத்தமும், அண்ணத்தால் கைக்கிளையும், சிரத்தால் உழையும், நெற்றியால் இளியும், நெஞ்சினால் விளரியும், மூக்கால் தாரமும் பிறக்கும் என்பர். இவை ஏழ் சுரம் எனவும் ஏழ் நரம்பு எனவும் பொருந்திக்கூறுவர். இசை, பாட்டு, பரதம், கூத்து முதலியவற்றிற்கு இன்றியமையாததாகும் .இசைக்குரிய கருவிகள் எழுப்பும் ஓசைகள் ஐந்து பொருள்களால் ஆனவை. அவை தோல் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி, மிடறு (கழுத்து) என்பனவாகும். இசைப்பு இசையாகும் என்பது தொல்காப்பியம் மிடற்றுப்பாடலின் ஒலிக்க ஏனையக் கருவியிசை இசைத்துவரலும், ஏனைக் கருவியிசையோடு மிடற்றுக்குரல் ஒத்திசைத்துச் செல்லலும் பற்றிய இசையே இசைக்கு அடிப்படையாகும். இசையாசிரியன்

அமைதியைக் கூறும் அரங்கேற்று காதை,

**"யாழும் குழலும் சீரும் மிடறும்**
**தாழ்குரல் தண்ணும்மை ஆடலோ டிவற்றின்**
**இசைந்த பாடல் இசையுடன் பகுத்து**
**வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கித்**
**தேசிகத் திருவின் ஓசை யெல்லாம்**
**ஆசின் றுணர்ந்த அறிவினன் ஆகிக்**
**கவியது குறிப்பும் ஆடற் தொகுதியும்**
**பகுதிப் பாடலும் கொளுத்தும் காலை**
**வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்**
**அசையா மரபின் இசையோன் தானும்" (சிலம்பு: 3:26-36)**

என்று கூறுகின்றது. வாய்ப்பாட்டு எனத்தனியே வழங்காமல் கருவியிசை ஆடலொடு ஒரு குழுவாக இயன்றமை இப்பாடல் மூலம் அறியமுடிகிறது.

### முழவு

முழவு தோல் கருவியால் ஆனதாகும். இது அகம், புறம், அகப்புறமுழவு என மூன்றாகப் பகுத்துணர்வர். அகமுழவு: மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, படகம், குடமுழா என்பன பக்க வாத்தியமாக இசைப்பாட்டில் இடம்பெறக்கூடியன.

புறமுழவு: கணப்பாறை, தமருகம், தண்ணும்மை, தடாரி, அந்தரி, முழவு சந்திரவலையம், மொந்தை, முரபு, கண்விடு, தூம்பு, நிசாளம், நுடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை, முதலியன புறமுழவு எனவும்கூறுவர்.

அகப்புற முழவு: தண்ணும்மை, தக்கை, தகுணிச்சம் என்பன மத்திமமான கருவிகள் ஆகும் இக்கருவிகளே அகப்புற முழவு என்றழைப்பர்.

### காற்றுக்கருவிகள்

புல்லாங்குழல், கொக்கரை, எனும் இக்கருவிகள் இரண்டும் துளை, காற்றுக்கருவிகள் என்று அழைப்பர், அதில் புல்லாங்குழலை (அ) மூடிய பகுதி (தூம்பு முகம்) 2. ஊதும் துவாரம் (முகரந்திரம்) 3. தாரந்திரம் 4. விரல்துளைகள் (சுரத்துபாரங்கள்) 5. திறந்த பகுதி என்று ஐந்தாக பாகம் பிரித்துரைப்பர். இக்குழல் கருவி சங்க காலந்தொட்டே இசைக்கக்கூடிய கருவியாக இருந்து வந்துள்ளது.

### முடிவுரை

இசைப்பாட்டு இயற்கையிலேயே மனிதர்களின் புலன்களின்வழியே புகுந்து அவர்களின் புறமனத்தை வீழ்த்தி அகத்தில் இன்பத்தையும் அமைதியையும் நிலைபெறச் செய்கிறது. அத்தகைய இசையினால் வரும் இன்பத்தின் பயனை பண்டைய இலக்கியங்களில் புலவர்கள் எடுத்துரைத்துள்ளதன் மூலம் பண்டைய மக்களின் வாழ்வோடு இசை பிண்ணிப்பிணைந்து இருந்ததை உணரமுடிகிறது. இசையானது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்காலத்திலும் அழியாத்தன்மை பெற்று விளங்குவதை இசைத்தமிழ் நூல்கள் எடுத்துரைத்துள்ளதன் மூலமும் இசை பிறப்பு முதல் இறப்புவரை தமிழர்களுடன் தொடர்புடைய கலையாகவே இருந்து வருகிறது என்பதற்குத் தாலாட்டு முதல் கையறுநிலை வரை உள்ள பாடல்களே சான்றுகளாக அமைந்துள்ளதையும் அறியமுடிகிறது.

### பயன்படுத்திய நூல்கள்

1. சங்க இலக்கியம் (இரு பகுதிகள்), வையாபுரிப் பிள்ளை பதிப்பு, பாரிநிலையம், சென்னை.
2. தொல்காப்பியம் பொருளதிகாரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
3. சிலப்பதிகாரம் - உ.வே. சாமிநாதையர் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழக மறுபதிப்பு.
4. பரிபாடல் - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
5. பாலசுப்பிரமணியன் கு.வெ, சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
6. வேங்கடசாமி மயிலை சீனி., தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், பாரிநிலையம், சென்னை.
7. வேங்கடசாமி மயிலை சீனி, நுண்கலைகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.